KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 4, No. 05 (2026) 4

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kijts04052026.47

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

பழந்தமிழரின் பண்பாட்டு அழகியல் கூறுகளில் நம்பிக்கைகள்

BELIEFS WITHIN THE CULTURAL AND AESTHETIC ELEMENTS OF THE ANCIENT TAMILS

Dr. C. Porkai Athirai[1,*]

[1] Associate Professor, Department of Tamil (SF), PSG College of Arts and Science, Coimbatore – 641 014.
***Corresponding author:** Dr. C. Porkai Athirai, porkaiathirai2024@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 10 January 2026
Revised: 20 January 2026
Accepted: 25 January 2026

Article ID
KIJTS-2026-0025

Peer review
Double-blind peer review

Keywords
Tamil language
culture
lifestyle
values

ABSTRACT

The Tamil language, which has a rich grammatical literature, has a special place for cultural traditions. The culture of the ancient Tamils is world-class in terms of literary aesthetics and concepts. These literatures elaborate on the Tamil language, culture, lifestyle, and its values. Beliefs are created, developed, and spread by people due to their biological fears, desires, and frustrations. This article establishes that such 'beliefs' have an essential place in cultural elements.

How to cite this article: Dr. C. Porkai Athirai (2026). *பழந்தமிழரின் பண்பாட்டு அழகியல் கூறுகளில் நம்பிக்கைகள். KALANJIYAM – International Journal of Tamil Studies*, *4*(05), 994–1005. https://doi.org/10.63300/kijts04052026.47
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

முனைவர் சி.பொற்கை ஆதிரை, இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை(சுயநிதிப்பிரிவு), பூசாகோ கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 641014. மின்னஞ்சல் : porkaiathirai2024@gmail.com

ஆய்வுச் சுருக்கம் :

செம்மையான இலக்கண இலக்கியங்களை கொண்ட தமிழ்மொழியில் பண்பாட்டு மரபுகளுக்கென்று தனியிடமுண்டு. இலக்கிய அழகியல், கருதாக்கங்களுள் பழந்தமிழரின் பண்பாடு உலகச் சிறப்புடையது. இவ்விலக்கியங்கள் தமிழர்தம் பண்பாட்டு வாழ்வியல் ஒழுக்கங்களையும் அதன் மாண்புகளையும் விரிவாக எடுத்துரைக்கின்றன. வாழ்வியல் சார்ந்த அச்சவுணர்வு, ஆசை, நிராசை போன்றவைகளால் மக்களால் உருவாக்கப்பட்டு நம்பிக்கைகள் தோன்றவும் வளரவும் பரவவும் காரணமாக உள்ளன. இத்தகைய 'நம்பிக்கைகள்' பண்பாட்டுக் கூறுகளில் இன்றியமையாத இடத்தை பெற்றுள்ளன என்பதை இக்கட்டுரை நிறுவுகிறது.

திறவுச் சொற்கள் :

பண்பாட்டு அழகியல், நம்பிக்கைகள், பழந்தமிழ் இலக்கியங்கள்

முன்னுரை

உயர்ந்த நாகரிகத்தையும் பண்பாட்டையும் கொண்ட மக்களின் வாழ்க்கைக்கூறுகள், அவர்கள்பேசும் மொழியின் வாயிலாகக் காலந்தோறும் பல்வேறு இலக்கியங்களாக வெளிப்படுகின்றன. அவ்வகையில், வாழ்க்கைக் கூறுகளைக் காட்டும் படைப்புகள் அனைத்தும் நிலைபெற்று விடுவதுமில்லை. எந்தப்படைப்பு வாழ்வின் ஆழமான பண்பாட்டு மரபுகளைப் பற்றி நிற்கின்றதோ, அந்தப் படைப்பு காலங்கடந்து வாழ்கின்றது. பழந்தமிழ் இலக்கியங்கள் என்று கூறப்படும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியன இன்றளவும் புதுமையுடன் திகழ காரணம், அவை அக்கால உயர்ந்த சமுதாய வாழ்வின் பண்பாட்டு மரபுகளை உள்ளபடியே வெளிப்படுத்தியிருக்கின்றன என்பதே ஆகும். பழந்தமிழ் இலக்கியங்களின் அழகியல் சார்ந்த தமிழரின் பண்பாட்டு மரபுகளுள் நம்பிக்கைகள் பெரும் பங்கினைப் பெறுகின்றன என்பதை நிறுவுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நாகரிகமும் பண்பாடும்

பொதுவாக, 'நாகரிகம்', 'பண்பாடு' ஆகிய இருசொற்களும் ஒரு பொருளைக் குறிக்கப் பயன்பட்டாலும் இரண்டிற்கும் இடையே நுட்பமான வேறுபாடு உள்ளது. பண்பாடு, உள்ளத்தோடு தொடர்புடையது. உள்ளத்தின் செம்மை - உயர்வு 'பண்பாடு' எனத்தகும். உள்ளத்திற்குப் புறம்பான உணவு, உடை, உறையுள் ஆகியவற்றின் செம்மை 'நாகரிகம்' ஆகும். பண்பாடு என்பது பழக்கவழக்கங்களோடு நெருங்கிய தொடர்புடைய ஒரு வாழ்க்கைமுறை. வாழ்க்கை நெறிமுறையின் வெளிப்பாடு நாகரிகம் எனப்படும். புறத்தோற்றத்தில் ஏற்படும் வளர்ச்சி நாகரிகம் என்றால் அகப்பண்புகளிலே சிறந்து விளங்குவது பண்பாடு ஆகும். நற்றிணையில்,

"முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்

நஞ்சும் உண்பர் நனிநாக ரிகர்" - நற். 355

என்றும், திருக்குறளில்,

"பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க

நாகரிகம் வேண்டு பவர்" – குறள். 580

என்றும், இச்சொல் இடம்பெற்றுள்ளது. 'கண்ணோட்டம்' என்ற பொருளில் பண்பாட்டைக் குறிப்பதாக"[1] கூறப்படுகிறது. 'நாகரிகம் என்பது நகர மக்களின் திருந்திய வாழ்க்கை'[2]என்றும் "மனிதனுடைய வளர்ச்சியினை இரண்டாகப் பகுத்துக் காணலாம். அவற்றை அகவளர்ச்சி என்றும், புறவளர்ச்சி என்றும் அழைக்கலாம்"[3]விளக்கப்படுகிறது. இவ்விரு வளர்ச்சிகளும் மனிதனுடைய அறிவு, அனுபவம் என்ற இரண்டினைக் கொண்டது. அறிவு, அனுபவம் இரண்டும் அன்பு, அருள், வாய்மை, தூய்மை, ஒப்புரவு, கண்ணோட்டம், ஈகை, நாணம் முதலிய நுண்பொருள்கள் சார்ந்தனவாகவும், உணவு, உடை, உறையுள், சிற்பம், ஓவியம் போன்ற பருப்பொருள்கள் சார்ந்தனவாகவும் காணப்படுகின்றன. இவற்றை அகவளர்ச்சி, புறவளர்ச்சி எனலாம். இவ்விரண்டும் இணைந்த சமுதாயத்தையே வளர்ச்சிப்பெற்ற சமுதாயம் என்று கருதப்படுகிறது. எனவே உள்ளத்தினுள் பண்பு இருந்தால்தான் புறத்தில் நாகரிகம் பிறக்கும். ஆதலால் நாகரிகம் என்பது பண்பாட்டினுள் அடங்கும்.

நம்பிக்கைகள்

ஒரு சமுகத்தின் பண்பாட்டு மரபுகளை அறிந்துகொள்ள அச்சமூகத்தின் நம்பிக்கைகள் உதவுகின்றன. இந்த நம்பிக்கைகள் மக்களின் அச்சவுணர்வுகள், ஆசைகள் போன்றவற்றால் உருவாக்கப்பட்டு மக்களாலே வழிவழியாக வளர்த்தெடுக்கப்பட்டு வருகின்றன. பிறப்புமுதல் இறப்புவரை மனித வாழ்வில் பல்வகை நம்பிக்கைகளும் இடம்பெறுகின்றன. பண்டைத் தமிழர் தமக்கேயுரிய சில நம்பிக்கைகளைக் கொண்டிருந்தனர். அவை சங்கப்பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. "நம்பிக்கை ஒரு செயலின் காரணமாகவும், மரபுவழியாகச் சந்ததி, பின் சந்ததி ஆகியோரால் பின்பற்றப்படும் வழக்காகவும் உள்ளது"[4] என்றும் "நம்பிக்கைகளால் அந்தந்த இனத்தின், நாட்டின் பண்பாடுகள் வெளிப்படக் காணலாம். மனிதனின் தன்னல உணர்வும், சமுதாய உணர்வுமே நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன."[5]

தொல்காப்பியதில் "நம்பும் மேவும் நசையாகும்மே" (தொல்.பொருள்.உரி.நூ.33) என்று வருகின்றது. நம்பு என்ற சொல்லிற்கு 'நசை' அல்லது 'விருப்பம்' எனும் பொருளைத் தருகின்றது.

நற்றிணை 327ஆம் பாடலில் 'நம்புதல்' என்ற சொல்லாட்சி நம்பிக்கை என்னும் பொருளில் வந்தள்ளது. 'நம்பிக்கை' என்ற பொருளிலேயே நற்றிணையில் பயின்றுவந்துள்ளமையை அறிய இயலுகின்றது.

"சேரியம் பெண்டிர் சிறுசொல் நம்பிச்

சுருவான் போல நோக்கும்" - நற். 327

இவற்றிலிருந்து நம்பு என்ற சொல், தொடக்கத்தில் 'விருப்பம்' என்ற பொருளிலும் பின்னர் 'நம்பிக்கை' என்ற பொருளிலும் வருவதை அறியமுடிகின்றது. இப்பொழுது நம்பிக்கை என்ற பொருளே வழக்கில் உள்ளது.

'Faith', 'belief' என்ற இரு சொற்களுக்கும் தமிழில் நம்பிக்கை என்ற ஒரே பொருள் உள்ளது. 'Faith' எனும் சொல் பெரும்பாலும் சமயஞ்சார்ந்த நம்பிக்கையைக் குறிக்கும். 'Belief' எனும் சொல் சமயஞ்சார்ந்த நம்பிக்கை மட்டுமின்றி ஏனைய சமூக வாழ்வியல் நம்பிக்கையையும் குறிக்கும்.

சங்க கால மக்கள் விரிச்சி கேட்டல், நிமித்தம் பார்த்தல், கண் துடித்தல், விரிச்சி கேட்டல், சகுனம், பல்லி ஒலித்தல், வண்டு ஒலித்தல், பேய் பற்றிய நம்பிக்கைகள், கனவு, மறுபிறப்பு போன்றவற்றில் நம்பிக்கைகள் கொண்டிருப்பதை பழந்தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

விரிச்சி கேட்டல்

விரிச்சி என்பது நம்பிக்கைகளைத் தருகின்ற ஒரு நிகழ்வாகும். விரிச்சியை நம்புவதாலேயே மக்கள் வாழ்க்கையை நம்புகின்றனர் எனலாம். எனவே வாழ்க்கைக்குத் தேவைப்படுகின்ற நம்பிக்கை அழகியலாக (AESTHETIC OF BELIEFS) 'விரிச்சி' பழந்தமிழ் இலக்கியத்தில் விரிவு பெறுகிறது. இதனை, மங்கலச் சொல் கேட்டல், நற்சொல் கேட்டல் என்றும் அழைப்பதுண்டு.

தொல்காப்பியம் புறத்திணையியலில், வெட்சித்திணையில் விவரிக்கப்படும் போர் நிகழ்ச்சிகளான துறைகளுள் 'பாக்கத்து விரிச்சி'(தொல்.பொருள்.புறத்.நூ.61) என்பது சுட்டுகின்றது. 'விரிச்சி' என்பதற்கு, "வருவதை முன்னரே தெரிவிப்பது"[6]என்று பொருள் கூறப்படுகிறது. எந்த செயலையும் செய்யும் முன்னரோ அல்லது செய்யும்பொழுதோ அயலவர் சொல்லிச்செல்லும் சொற்கள் நன்மை, தீமை ஆகியவனவற்றை உணர்த்துவதாகப் பழந்தமிழர் நம்பினர். தலைவியானவள் தலைவன் பிரிந்து செலவு சென்றபோது, அவன் குறித்துச்சென்ற பருவம்வரை காத்திருப்பாள். அப்போது தலைவன் குறித்த பருவம்

வருவதற்கு 'விரிச்சி கேட்டல்' அன்றைய நம்பிக்கையாகும். விரிச்சி கேட்கும்பொழுது தெய்வத்தை நெல்லும், நீரும், பூவும் தூவி வழிபடுவது வழக்கம்.

"நென்னீர் எறிந்து விரிச்சி ஓர்க்கும்" - புறம். 280

என்றும்,

".....நெல்லொடு

நாழி கொண்ட நறுவீ முல்லை

அரும்பவிழ் அலரி தூஉய்க் கைதொழுது

பெருமுதுபெண்டிர் விரிச்சி நிற்ப" - முல்லைப். 8 - 11

என்றும் பாடலடிகள் விரிச்சி கேட்கும் சூழலின் அழகியலை விவரிக்கின்றன. நாழி நெல், முல்லை மொட்டுக்கள், அலரிஅரும்புகள் ஆகியவற்றைக் கொண்டு தெய்வத்தை வேண்டிநிற்கும் சூழல் இதனை விளக்குகிறது.

நிமித்தம் பார்த்தல் (நாள், புள், மரம்) :

ஒருசெயலைச் செய்ய தொடங்கும்முன் நன்னாள், நற்பொழுது, நன்னிமித்தம் பார்த்துத் தொடங்கியுள்ளனர். "நிமித்தம் என்பது பின்னர் நிகழும் நன்மை தீமைகளை முன்னரே அறிவிக்கும் குறி"[7]என்று குறிக்கப்படுகிறது. பழந்தமிழர் பண்பாட்டுக் கூறுகளுள் நன்மைகளுக்காக அவாவும் இத்தகுப் பண்பாட்டுக் கூறுகள் வாழ்க்கை அழகை எதிர்நோக்கியே அமைகின்றன.

தொல்காப்பியர், "**நாளும்புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்" (தொல்.பொருள்.புறத்.நூ.30)** என்று நிமித்தம் பற்றிச் சுட்டுகிறார். நிமித்தத்தை நன்னிமித்தம், தீ நிமித்தம் என்று இரண்டாகக் கூறலாம். இந்நிமித்தங்கள் நாள், பொழுது, கோள், விலங்கு, பறவை, மாந்தர், மரம் போன்றனவாயிலாக வெளிப்படுத்துகின்றன.

நாள் நிமித்தமாக, புலவர், கூத்தர், விறலியர் போன்றோர் பரிசில் பெறச் செல்லும்போது,

"நன்னன்சேய் நன்னற் படர்ந்த கொள்கையொடு.....

புள்ளினிர் மன்ற என் தாக்குறுதலின்" - மலைபடு. 64-66

என நிமித்தம் பார்த்து சென்றதாக கூறுகிறது. தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவி,

"**விடர் முகை அடுக்கத்து விறல்கெழு சூலிக்குக் .....**

புள்ளும் ஓராம்; விரிச்சியும் நில்லாம்" - குறுந். 218

என்று நன்னிமித்தம் எதிர்பார்த்து நின்றது குறிப்பிடப்படுகிறது.

'புள்நிமித்தம்' என்பது பறவைகளின் ஒலி, இயக்கம் ஆகியவற்றால் நிமித்தம் காணுதலாகும்.

"அஞ்சு வரு குராஅற் குரலுந் தூற்றும்" - புறம். 280

எனும் புறநானூற்றுப் பாடலடி புள்நிமித்தத்தைச் சுட்டுகிறது. "பழந்தமிழரைப் போலவே பண்டைய கிரேக்கரும், உரோமானியரும் பறவைகள் பறப்பதையும், ஒலிப்பதையும் நிமித்தங்களாகக் கருதியிருந்தமையினைத்"[8] நோக்கத்தக்கது. விருந்தினர் வருவர் என்று காக்கை கரைந்ததாகக் கூறும் குறுந்தொகைப் பாடலொன்றுள்ளது.

"பெருந்தோ ணெகிழ்த்த செல்லற்கு

விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே" - குறுந். 210

தலைவனுடன் தலைவி உடன் போக்காய்ச் சென்று விட்டாள் என்பதை அறிந்து வருந்தும் நற்றாய், தலைவனும் தலைவியும் திரும்பி வந்ததும் மணம் முடித்துப் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறாள். காக்கையை அதற்கு நல் நிமித்தமாகக் கரையும்படி வேண்டுகிறாள். அவ்வாறு கரைந்தால் பலிக்கடன் தந்து மகிழ்வுறுத்துவதாகவும் கூறுகிறாள்.

காக்கைக்குப் பலியுணவிடுவது இருவகையாக இருந்துள்ளன. 1. நெய் கலந்து வெண்ணெல் வெஞ்சோறு; இது புலவின்றி ஆக்கப்பெறும் சைவ உணவு. 2. பச்சிறைச்சியிடப்பட்ட நிணத்தால் சமைத்த நல்லுணவு. இது புலவு கலந்த அசைவ உணவு.

மரநிமித்தம் என்பது மரங்கள், மலர்கள் கொண்டு நிமித்தம் பார்த்தலாகும். பனை, ஆல், கடம்பு மரங்களில் கடவுளர் உறைவதாகப் பண்டைத்தமிழர் நம்பினர். இந்நம்பிக்கை இன்றும் தொடர்கிறது.

"சதுக்கமும், சந்தியும், புதுப்பூங் கடம்பும்" - திருமுருகா. 225

எனும் தொடர் முருகன் உறையும் இடங்களில் மரச்சோலைகளையும் குறிப்பிடுகிறது. புன்னைமரம் நிமித்தம் பார்க்கும் மரமாகும்.

"புன்கால் உன்னஞ் சாயத்து எண்கள்" - பதிற்றுப். 40

எனும் பதிற்றுப்பத்துப் பாடலடியால் இதனை அறியமுடிகிறது.

சில நிகழ்ச்சிகளைத் தீய நிமித்தங்களாகப் பழந்தமிழ் இலக்கியங்கள் சுட்டியுள்ளன. தும்பிகள் நடுப்பகலில் பறத்தல், இரவில் விளக்கு நில்லாமை, கூகை குழறல், பெருந்தூக்கம் வருதல், விண்மீன் கீழே வீழ்தல், மைம்மீன் புகைதல், பசியமரம் தீப்பற்றல் போன்றன தீநிமித்தங்களாகக் கருதப்பட்டன. காண்போர்க்கு அச்சத்தையும் அருவருப்பையும் தரும் ஆந்தை, பெரும்பாலும் காட்டிடை வாழும். பகலில் கண் தெரியாது; இரவில் நன்கு கண் தெரியம் ஆந்தையைத் தீமையின் நிமித்தமாக மக்கள் கருதினர். ஆந்தையின் அலறலைத் தீ நிமித்தமாகவே இலக்கியங்கள் சுட்டுகின்றன.

"கவலை வெண்ணெரி கூஉமுறை பயிற்றிக்

கழங்கட் கூகைக் குழறுகுரற் பாணிக்

கருங்கட் பேய் மகள் வழங்கும்

பெரும்பா ழாகுமன்னிய தாமே" – பதிற்று. 3-ஆம் பத்து. பாடல்.32

கூகை குழறுதல் நாட்டிற்கு வரும் அழிவை உணர்த்தும் தீய நிமித்தமாக மேலே உள்ள பாடல் சுட்டுகின்றது.

இவ்வாறு நிமித்தங்கள் அல்லது இயற்கை நிகழ்வுகள் தம் வாழ்க்கை நிகழ்வுகளைக் கட்டுப்படுத்தும் கூறுகளாக அமையும் என்பது பழந்தமிழரின் நம்பிக்கை அடிப்படையில் உருவான பண்பாட்டு அழகியலாகும். இயற்கையையும் தம் வாழ்க்கை நிகழ்வுகளையும் இயைத்துப் பார்த்த தமிழர் சிந்தனை சுற்றுச்சூழல் உணர்வுக்குச் சிறந்த சான்றாகும்.

கண் துடித்தல் :

இயற்கைப்பொருட்கள் மட்டுமன்றி, தம் உடல் உறுப்புக்களின் இயற்கையான இயக்கங்கள்கூட தம் வாழ்க்கைப் போக்கினைக் கட்டுப்படுத்தும் திறம் உடையன என்று பண்டைத் தமிழர் நம்பினர்.

கண் துடித்தல் கொண்டும் நன்மை தீமை கணிக்கும் நம்பிக்கை அவர்கட்கு இருந்தது. மகளிர்க்கு இடக்கண் துடித்தால் நன்மையும், வலக்கண் துடித்தால் தீமையும் உண்டாகும் என்றும் ஆண்களுக்கு வலக்கண் துடித்தால் நன்மை உண்டாகும் என்றும் நம்பினர். தலைவன் பிரிந்து சென்று வருந்தும் தலைவியை ஆற்றுவிக்க தோழி, நுண்ணிய புருவத்தையுடைய இடக்கண் துடிப்பதால் தலைவன் விரைவில் வருவான் எனக் கூறுகிறாள் :

"நுண்ணோர் புருவத்த கண்ணும் ஆடும்" - ஐங்குறு. 218

தலைவன் பிரிந்து செல்லும்போது தலைவி கண் கலங்குதல் தீமையாகும். இதனைப் பின்வரும் பாடற்பகுதியால் அறியலாம் :

"அருஞ்செயல் பொருட்பிணி முன்னி, யாமே .....

பின்னிருங் கூந்தலின் மன்றயினள் பெரிதழிந்து" - நற். 113

என்ற பாடலில் தலைவி தன் கண்ணீரைக் கூந்தல் கொண்டு மறைத்தாள் என்பதாக இடம் பெறுகிறது.

பிரிவுத் துன்பத்தில் உழலும் தலைவிக்கு ஆறுதல் கூறும் தோழி, ''இடக்கண் துடிக்கின்றது. தலைவன் வருதல் உறுதி'' என்று நிமித்தங்கூறி ஆற்றுவிக்கின்றமையை,

"இணை நலமுடைய கானஞ் சென்றோர்

புனைநலம் வாட்டுந ரல்லர் மனைவயிற்

பல்லியும் பாங்கொத் திசைத்தன்

நல்லெழி லுண்கணு மாடு மாலிடனே" - கலித்.பாலைக்கலி.11

இவ்வாறு உடல் உறுப்புக்களின் இயற்கை இயக்கங்கள்கூட பண்டைத் தமிழரின் பண்பாட்டு அழகியல் உணர்வுக்கு இடந் தந்துள்ளது.

கனவு நம்பிக்கை :

நனவில் காணவியலாத காட்சிகளைக் கனவில் கண்டு துய்த்தல் என்பது உறக்கத்தின்போது ஏற்படும் இயல்பான நிகழ்வாகும். இது உளவியலோடு பெரிதும் தொடர்புடையது.

நனவில் நடைபெறவியலாத நிகழ்ச்சிகள், நனவில் அடக்கப்பட்ட உணர்வுகள் கனவில் தோன்றுகின்றன. சங்க இலக்கியங்களில் கனவுகள் நம்பிக்கைகளாகவும், பின் வருவதை முன்னரே உணர்த்துவனவாகவும் அமைந்துள்ளன. தொல்காப்பியத்தில்; கனவு பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன. களவியலிலும், மெய்ப்பாட்டியலிலும்,

"கனவும் உரித்தால் அவ்விடத்தான" - தொல்.பொருள்.பொருளி.நூ. 3

"தாய்க்கும் உரித்தால் போக்குடன் கிளப்பின்" - தொல்.பொருள்.பொருளி.நூ. 4

"காதல் கைம்மிகக் கனவின் அரற்றலும்" - தொல்.பொருள்.களவி.நூ. 24

"...கண்துயில் மறுத்தல், கனவொடு மயங்கல்" - தொல்.பொருள்.மெய்ப்.நூ. 22

எனச் சுட்டப்படுகின்றன.

"இலக்கியங்களில் உவமை, உள்ளுறை நிலையில் உணர்வு வெளியீட்டிற்காகக் கனவுகள் பயன்படுத்தப்படுகின்றன என்றும், கனவால் எதிர்காலத்தில் விளையும் நன்மை, தீமைகளைக் கணித்தனர்."[9] கனவு என்பது ஓர் அழகிய இனிய இயல்புடையது என்பதாக,

"கனவெனப்பட்தோர் காரிகை நீர்த்தே" - கலித். 82

எனக் கலித்தொகை மொழிகிறது. தலைவி காதல் மிகுதியால் கனவு கண்டு அரற்றுவதுண்டு. காமம் இடையீடுபட்டவழித் தலைவனுக்கும் தலைவிக்கும் கனவு தோன்றும். மகள் உடன்போக்குச் சென்றவிடத்து நற்றாய்க்குக் கனவு நிகழ்வதுண்டு. சங்க இலக்கியங்களில் கனவுகள் இவ்வாறே பேசப்படுகின்றன.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் பிரிவிற்காக அவன் மனைவி ஆற்றியிருந்தபோது இரவில் அரிதிற்பெற்ற துயிலில் உண்டாகும் சிறுமகிழ்ச்சிக் காலத்தும் கனவு கண்டு வருந்தியதனை,

"எல்லு நனியிருந்து எல்லிப் பெற்ற

அரிதுபெறு பாயந் சிறுமகிழானும்

கனவினுள் உறையும்.....வாணுதல் அரிவை"-பதிற்றுப். 19

என்று கூறுகிறது. மகளுக்கு உற்ற நோயினை அறியாத தாய், கனவுவழி உண்மைநிலையைத் தெளிய வேண்டும் எனத் தோழி விரும்புவதாக,

"கண்ணினுங் கனவினுங் காட்டி இந்நோய்

என்னினும் வாராது மணியின் தோன்றும்

அம்மலை கிழவோன் செய்தனன்" - நற். 173

என்று உரைக்கிறது. சங்க இலக்கியப்புலவர் "முல்லைநிலத் தலைவி கனவு காண்பதாகக் காட்டவில்லை."[10]சங்கப்பாடல்களில் கனவு என்பது ஒரு மகிழ்ச்சிக்குரிய நிகழ்வாகவும் நனவில் பெற முடியாததைக் கனவில் கண்டு இன்புறலாம் என்ற உணர்வைத் தோற்றுவிப்பதாகவும் மாந்தர் அழகியல் உணர்வை மட்டுமல்லாது இலக்கிய அழகியலையும் தோற்றுவிப்பதாக அமைகிறது.

பல்லி நிமித்தம்

விலங்கு, ஊர்வனவற்றில் நிமித்தம் பார்க்கும் பழக்கத்தை இலக்கியங்கள் காட்டுகின்றன. பல்லி, ஓந்தி, ஆமை, யானை, குதிரை, பன்றி, நரி போன்றவற்றில் நிமித்தம் பார்க்கும் வழக்கம் அன்றிலிருந்து இன்றுவரை இருந்து வருகிறது.

பல்லி ஒலித்தலை நிமித்தமாகக் கருதுதல் சங்ககாலம் தொட்டு இன்றுவரை தமிழ் மக்களிடம் இருக்கும் ஒரு வழக்கமாகும். சங்க இலக்கியத்தில் பல்லியின் ஒலி நன்னிமித்தமாகக் கூறப்படுகின்றது. நாட்டார் பழக்கத்தில் பல்லியைக் 'கெவுளி' என்று குறிப்பர். பல்லியின் ஒலி நல்லொலியாக இருப்பதை வைத்து அவற்றைக் கணிவாய்ப்பல்லி, முதுவாய்ப்பல்லி என்று அழைத்துள்ளனர்.

"உயர் புகழ் நல்லில்ஒள் சுவர்ப் பொருந்தி

நயவருகுரல பல்லி

நள்ளென் யாமத் துள்ளுதொறும்படுமே" - நற்.98

என்றிவ்வாறு பல்லியொலி நன்னிமித்தமாக உள்ளதை அறியமுடிகின்றது.

முடிவுரை :

நம்பிக்கை இல்லா வாழ்வு இல்லை என்ற தொடருக்கு ஏற்றாற்போல் மனித வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரை நம்பிக்கைகள் நீக்கமற நிறைந்துள்ளன. உலக மக்கள் அனைவரிடமும் இந்த நம்பிக்கைகள் அவர்கள் வாழ்வியலில் இடம்பிடித்துள்ளன. மானிட பண்பாட்டுக்கூறுகளில் இந்த நம்பிக்கைகளே தனிமனித வாழ்வையும் ஒரு சமுதாய வாழ்வையும் வழிநடத்திச் செல்வனவாக விளங்குகின்றன. இந்த நம்பிக்கைகளே அவரவர் பண்பாட்டு மரபுகளின் அழகியல் அடையாளமாகும் என்பதே இக்கட்டுரை நிறுவுகிறது.

அடிக்குறிப்புகள் :

1. தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், தமிழும் பிற பண்பாடும், ப.1.நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,சென்னை - 1999.
2. பாவாணர், பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும், ப.6.தமிழ்மண் பதிப்பகம், சென்னை-2000.
3. அ. தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப.506., வெற்றிச்செல்வி பதிப்பகம், தஞ்சாவூர். 1980.
4. வாழ்வியற்களஞ்சயம், தொகுதி-11, பக்.220-221., தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-1991.
5. செ. பழனிச்சாமி, புறநானூற்றில் தமிழர் பண்பாடு, ப.102.,வாணி பதிப்பகம், கோவை-1989.
6. சு. வித்தியானந்தன், தமிழர் சால்பு, ப.196.பாரி புத்தகப்பண்ணை, சென்னை- 1980
7. இ. சுந்தரமூர்த்தி, இலக்கியச் சுடர், ப.11.அன்பு நூலகம், சென்னை- 1991.
8. Xavier S. Thaninayagam, Nature in Ancient Tamil Poetry, P.88, Palaniyappa Brothers, Chennai-1983
9. க.காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை -113. - 2003
10. ச.வே. சுப்பிரமணியன், இலக்கியக் கனவுகள், ப.18.தமிழ்ப்பதிப்பகம், சென்னை -1981.

பார்வை நூல்கள் :

References

இளம்பூரணர் (உரை.) , தொல்காப்பியம் – பொருளதிகாரம், கழக வெளியீடு, சென்னை. 1983.

பொ.வே.சோமசுந்தரனார், பத்துப்பாட்டு(உரை.), கழக வெளியீடு, சென்னை.2008.

எட்டுத்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பதிப்பு,சென்னை-2011.